செ.வெ.எண். 20/மார்ச்                                                                     தேதி : 09.03.2017

**தருமபுரி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 15 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் முதல் தவணையாக ரூ. 2 இலட்சத்து 8 ஆயிரத்து 336/-க்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.**



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 15 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் முதல் தவணையாக ரூ. 2 இலட்சத்து 8 ஆயிரத்து 336/-க்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கி தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட **73337** விவசாயிகள் உள்ளனர். மேலும் வடகிழக்கு பருவமழை 2016 பொய்த்ததன் காரணமாக ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் பட்டு வளர்ச்சித் துறை பயிர்களுக்கு உரிய விவசாயிகளுக்கு இடுபொருள் நிவாரணம் வழங்க முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதில், அரசிடமிருந்து **ரூ. Rs.19,19,23,000/-** வரப்பெற்று, பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு ECS மூலம் வரவு வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவின்போது அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.ஆர். முருகன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், கோட்டாட்சியர்கள் திரு. க. இராமமூர்த்தி, திருமதி. கவிதா, பேரிடர் மேலாண்மை தனி வட்டாட்சியர் திருமதி. விஜயா, பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர்

திரு. கே.பி.அரங்கநாதன், முன்னாள் நகரமன்ற தலைவர் திரு. எஸ்.ஆர். வெற்றிவேல், மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. வேலுமணி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.